

விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்றது. உடன் திருச்சுழி ஒன்றியச் செயலாளர்கள் பொன்னுத்தம்பி, சந்தானப்பாண்டியன், காரியாபட்டி நகரச் செயலாளர் ஆர்.கே.செந்தில், ஒன்றிய செயலாளர்கள் மந்திரி ஓடை கண்ணன், செல்வம், நரிக்குடி கண்ணன், வர்த்தக அணி துணை அமைப்பாளர் தங்கத் தமிழ்வாணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 157வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம், மேலமாசி வீதி காதிகிராப்ட் கதர் விற்பனை நிலையத்தில் உள்ள உத்தமர் காந்தியடிகள் அவர்களின் திருஉருவச் சிலைக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, வரலாற்றுப் புகைப்படங்களை பார்வையிட்டு தீபாவளி கதர் சிறப்பு விற்பனையை துவக்கி வைத்தார். உடன் மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா, மாமன்ற உறுப்பினர் பெ.சசிக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கதர் வாரிய பணியாளர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

# அத்தைக்கு மீசை முளைக்கட்டும் பார்த்துக் கொள்ளலாம்!

## வேலூர் காட்பாடியில் அமைச்சர் துரைமுருகன் பேட்டி!



வேலூர்,அக். 6-

வேலூர் மாவட்டம் காட்பாடி பகுதி திருவள்ளுவர் நகர், ஜோதிநகர் பகுதியை சார்ந்த 45 பயனாளிகளுக்கு சிறப்பு வரன்முறை படுத்தும் திட்டத்தின்கீழ் ரூ.7.20 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்கள் வழங்கும் விழா நடந்தது.

விழாவிற்கு மாவட்ட கலெக்டர் வே.இரா.சுப்புலெட்சுமி தலைமை தாங்கி பேசினார். வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாநகராட்சி மேயர் சுஜாதா, துணைமேயர் எம்.சுனில்குமார் மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பயனாளிகளுக்கு பட்டாக்களை கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கி பேசியதாவது;

தமிழ்நாடு முதலமைச்சராக தளபதி மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் பொதுமக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் சிறப்பு வரன்முறை திட்டத்தை கொண்டு வந்து இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கி வருகிறார்கள். 45 பயனாளிகளுக்கு அதன் அடிப்படையில் இப்போது வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட கால பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. இந்த காட்பாடி தொகுதியில் கடந்த 4 ஆண்டுகளில் பாலங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள், சாலைகள் என பல்வேறு வளர்ச்சி பணிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த தொகுதி மேன்மை அடைய வேண்டும்என்பதற்காக இது போன்ற மேம்பாட்டு பணிகள் தொடர்ந்து செய்து வருகிறேன். காட்பாடி தொகுதியில் உள்ள பிற பகுதிகளை சார்ந்த பொது மக்களுக்கும் இந்த திட்டத்தின்கீழ் படிப்படியாகவீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் காட்பாடி ஒன்றிய குழுத்தலைவர் வேல்முருகன், துணைத்தலைவர் எஸ்.சரவணன், மாநகராட்சி கமிஷனர் லட்சுமணன், வேலூர் உதவி கலெக்டர் செந்தில் குமார், காட்பாடி தாசில்தார் ஜெகதீஸ்வரன், முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.தணிகாசலம் மாமன்ற உறுப்பினர்கள் ஜி.சித்ராலோகநாதன்,ஜி.ரவிக்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டிடாசரவணன்,மாநகர மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.சதீஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்வியும், அதற்கு அவர் அளித்த பதிலும் விவரம் வருமாறு;

**கேள்வி:** கரூர் சம்பவம் தொடர்பாக முறையான விசாரணையை அதிகாரிகள் மேற்கொள்ளாவிட்டால் 2026ல் அ.தி.மு.க., ஆட்சிக்கு வந்த பிறகு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எடப்பாடி பழனிச்சாமி பேசி இருப்பது குறித்து?.

**பதில்:** அத்தைக்கு மீசை முளைக்கட்டும் பார்த்துக் கொள்ளலாம்.

**கேள்வி:** தி.மு.க அரசை வீட்டிற்கு அனுப்பும் நேரம் நெருங்கி விட்டதாக ஜி.கே.வாசன் எம்.பி., கூறி உள்ளாரே?.

**பதில் :** சிங்கிள் ரூமுக்குள்ள கட்சியின் செயற்குழுவை நடத்துபவர் களுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது.

**கேள்வி:** உளவுத்துறை கருத்து கேட்டு நடவடிக்கை எடுப்பதாக வெளியான தகவல் குறித்து?.

**பதில் :** உங்களுக்கு டைட்டில் வேண்டும் என்பதற்காக ஆதாரமற்ற எதையும் என்னிடம் கேட்காதீர்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

கரூர் கொடுந்துயரம்:

# சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணையைத் தொடங்கியது!

கரூர், அக்.6-

கரூர் துயரச் சம்பவம் தொடர்பாக ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

கரூரில் கடந்த மாதம் 27ம் தேதி நடிகர் விஜய் பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த துயர சம்பவம் நாட்டையே உலுக்கியது. இதையடுத்து இந்த சம்பவம் தொடர்பாக விசாரித்து அறிக்கை அளிக்க ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் ஆணையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைத்துள்ளார். அதன்படி நீதிபதி அருணா ஜெகதீசன் கரூரில் 2 நாள் முகாமிட்டு விசாரணை நடத்தினார்.

இதனிடையே இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக ஏடிஎஸ்பி பிரேமானந்த் நியமிக்கப்பட்டார். சம்பவம் தொடர்பாக கரூர் மாவட்ட தவெக நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் கரூர் சம்பவம் தொடர்பான வழக்குகளை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், கரூர் சம்பவம் தொடர் பாக விசாரிக்க வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து கரூர் விசாரணை அதிகாரியாக ஏற்கனவே நியமிக்கப்பட்டு இருந்த ஏடிஎஸ்பி பிரேமானந்த் விசாரணை ஆவணங்களை சிறப்பு விசாரணைக் குழுவிடம் ஒப்படைத்தார்.

இந்நிலையில், அஸ்ரா கார்க் தலைமையிலான குழுவினர் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

இந்த சிறப்பு புலனாய்வு குழுவில் நாமக்கல் மாவட்ட எஸ்.பி. விமலா, சிபிசிஐடி எஸ்பி சியாமளா தேவி ஆகிய 2 பெண் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். மேலும், 3 ஏடிஎஸ்பிக்கள், டிஎஸ்பிக்கள், ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் இந்த குழுவில் உள்ளனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ம.கிரகாம்பெல் களக்காட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் முன்னாள் எம்.பி. ஞான திரவியம்,ஜார்ஜ் கோசல்,நம்பி, ராஜன், செல்வகருணாநிதி,ஜோசப் பெல்சி, சுடலைக்கண்ணு, எரிக் ஜூடு பரமசிவஜயப்பன், சாந்தி சுபாஷ், மணி சூரியன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.தொடர்ந்து பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார்,பெருந்தலைவர் காமராஜர், சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஆகியோர்களது திருவுருவ சிலைகளுக்கும், வ.உ.சிதம்பரனார், அழகுமுத்துக் கோன் ஆகியோர் களின் திருவுருவபடத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முதுபெரும் எழுத்தாளர் கொ.மா.கோதண்டம் மறைவு:

# இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.6-

"முதுபெரும் எழுத்தாளர் கொ.மா. கோதண்டம் மறைவு இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முதுபெரும் எழுத்தாளர் குறிஞ்சிச்செல்வர் கொ.மா. கோதண்டம் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

எளிய குடும்பத்தில் பிறந்து பஞ்சாலைத் தொழிலாளராக தமது வாழ்வைத் தொடங்கிய திரு. கோதண்டம் அவர்கள், அதே எளிய மக்களுக்கான எழுத்தின் மூலமாக இலக்கிய உலகில் தடம்பதித்த மிகச்சிறந்த படைப்பாளி. அதுமட்டுமின்றி சிறார்களுக்கான இலக்கியப் படைப்புகளிலும் பெரும் பங்களிப்பைச் செய்து, இன்றைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

பால சாகித்திய விருது, குடியரசுத் தலைவர் விருது, தமிழ்நாடு அரசின் இலக்கிய மாமணி விருது எனப் பல்வேறு சிறப்புகளைப் பெற்ற இவரது நூல்கள், கடந்த 2025 ஏப்ரல் 5 அன்று நமது திராவிட மாடல் அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டன என்பதையும் நினைவு கூர்கிறேன்.

இத்தனை சிறப்புகள் வாய்ந்த எழுத்தாளர் கொ.மா. கோதண்டம் அவர்களின் மறைவு கலை, இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், சக எழுத்தா ளர்கள் மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

கலைஞர் பல்கலைக் கழக மசோதா!

# ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிட வேண்டும்!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு!

சென்னை, அக்.6-

கலைஞர் பல்கலைக் கழக மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிடக்கோரி, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சட்ட மசோதா கடந்த ஏப்ரல் மாதம், தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. கலைஞர் பெயரில் அமைக்கப்படும் பல்கலைக்கழகத்துக்கு வேந்தராக முதலமைச்சரை நியமிக்கவும் மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. துணைவேந்தர் நியமன மசோதா உள்ளிட்டவை தொடர்பான வழக்குகளில், 3 மாதங்களுக்குள் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து முடிவெடுக்க வேண்டும் என்று ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் கெடு விதித்திருந்தது. ஆனால் கலைஞர் பல்கலைக்கழக மசோதா நிறைவேற்றப்பட்டு 3 மாதங்களாக ஒப்புதல் அளிக்காமல் இருந்த ஆளுநர் ஆர்.என். ரவி, கடந்த ஆகஸ்ட் மாதம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார். மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய செயலுக்கு எதிராக எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

மசோதாவை ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பிய செயல் சட்டவிரோதமானது என்றும், அரசியல் சாசனப் பிரிவு 163, 200க்கு எதிரானது என்றும் அறிவிக்குமாறு தமிழ்நாடு அரசு கோரியுள்ளது.

ஆளுநரின் முடிவை ரத்து செய்து, மசோதாவை ஆளுநருக்கே குடியரசுத் தலைவர் திருப்பி அனுப்ப உத்தரவிடவும் வலியுறுத்தியுள்ளது. அரசியல் சாசன பிரிவு 200ன் படி, மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க உத்தரவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு 8 , 9 தேதிகளில் வருகை தரும்

# துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

திண்டுக்கல், அக். 6 –

திண்டுக்கல் மாவட்டத்திற்கு 8 , 9 தேதிகளில் வருகை தரும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

திண்டுக்கல்லில் கிழக்கு, மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் கலைஞர் மாளிகையில் மேற்கு மாவட்ட அவைத் தலைவர் மோகன் மற்றும் ஒன்றிய செயலாளர் சிவகுரு சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மேற்கு மாவட்டச் செயலாளர் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி பழனி சட்டமன்ற உறுப்பினரும், கிழக்கு மாவட்டச் செயலாளருமான இ.பெ.செந்தில்குமார் முன்னிலை வகித்து உரையாற்றினர். கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார்.

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரும் அக்.8, 9 ஆகிய இரண்டு தினங்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

அக்.8ம் தேதி திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சி குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற உள்ளது. இதில் கலந்து கொண்டு ஆய்வு செய்து ஆலோசனை வழங்குகிறார். தொடர்ந்து திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி கழக நிர்வாகி களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. அக்.9ம் தேதி வேடசந்தூரில் வேடசந்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வீராசாமிநாதன் இல்ல திருமண விழாவில் கலந்து கொள்கிறார். பின்னர் வேடசந்தூரில் புதிதாக கட்டப்பட்ட அரசு மருத்துவமனை கட்டிடத்தை திறந்து வைக்கிறார். நிகழ்ச்சியில் கலந்து கொள்ள திண்டுக்கல் வருகை தரும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாவட்ட எல்லையான அய்யலூரில் நிர்வாகிகள் திரண்டு வந்து சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும். மேலும் அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு பேசினார். தொடர்ந்து கூட்டத்தில், பல்வேறு தீர்மா னங்கள் நிறைவேற்றப்ப ட்டன.

இந்நிகழ்ச்சியில் வேட சந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் மற்றும் மாவட்ட,மாநகரநிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் செயலாளர்கள், அனைத்து மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா - கலைஞர் - தலைவர்கள் படங்களுக்கு மாலை அணிவிப்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் மரியாதை செலுத்தினார்!

நெல்லை, அக். 6 –

நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ம.கிரகாம்பெல் பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், அண்ணல் அம்பேத்கார், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோர்களின் திருவுருவச் சிலை களுக்கும்,முத்தமிழ் அறிஞர் கலைஞர், வ.உ. சிதம்பரனார், அழகு முத்துகோன் ஆகியோர்களின் திருவுருவப் படத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களிடம்

நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ம.கிரகாம்பெல் வாழ்த்து பெற்று விட்டு வள்ளியூர் வந்த அவருக்கு கழக நிர்வாகி கள் சார்பில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

பின்னர் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் களக்காட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலை, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் திருவுருவச் சிலை, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்

திருவுருவச் சிலை,வள்ளியூரில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருஉருவச் சிலை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் சிலை, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் சிலை போன்றவைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், அழகு முத்துக்கோன், வ.உ.சிதம்பரனார் ஆகியோர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் முன்னாள் எம்.பி., தலைமைச் செயற்குழு உறுப்பினர் சா.ஞானதிரவியம்,மாவட்ட துணை செயலாளர் நம்பி, மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ், ஒன்றிய செயலாளர்கள் ராஜன், கண்ணன்,

செல்வ கருணாநிதி, ஜோசப் பெல்சி, கணேசன், சுபாஷ் தங்க பாண்டியன், எரிச்சூடு, ஆரோக்கிய எட்வின், சுடலைக்கண்ணு, களக்காடு நகர செயலாளர் மணி சூரியன், நகர்மன்ற தலைவர் சாந்தி சுபாஷ், பேரூர் செயலாளர்கள் ஜான்கென்னடி, தமிழ்வாணன், சேதுராமலிங்கம், வானுமாமலை, முருகையா, அயூப்கான், மாவட்ட அணி அமைப்பாளர் மல்லிகா அருள், முருகன், கேசவன், மாடசாமி, மாவட்ட பிரதிநிதி முத்துராஜ் மற்றும் கழகத்தினர் அனிதா பிரின்ஸ், சுதாகர், ஆதிபாண்டி, சிவா, தனபால், ஆதிபரமேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.